# சிவகங்கை மாவட்டத்தில் ரூபாய் 14 கோடியில் 6107 மாணவர்களுக்கு மடிக்கணினி!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்!



சிவகங்கை, ஜன. 8-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இம்மாதம் ஐந்தாம் தேதி சென்னையில் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர்திருமதி கா .பொற்கொடி தலைமையில் எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் 19கல்லூரிகளில் படிக்கும் 6107 மாணவர்களுக்கு 13 கோடியே 22 லட்சம் மதிப்பிலான மடிக்கணினிகளை வழங்கி கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது. தமிழக முதல்வர் தளபதி அவர்கள் இன்று மாநில அளவில் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்கள் . அதன் தொடர்ச்சியாக சிவகங்கை மாவட்டத்தில் 19 அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் படிக்கும் 6107 மாணாக்கர்களுக்கு ரூபாய் 13 கோடியே 22லட்சம் மதிப்பிலான மடிக்கணினிகள் இன்று வழங்கப்படுகின்றது. கடந்த நான்கரை ஆண்டுகளில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் தேர்தல் வாக்குறுதி அறிவிப்பு திட்டங்களை 95 சதவீதம் நிறைவேற்றி உள்ளார்கள். தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்டதையும் சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறார்கள். ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது கல்வியை பொறுத்துதான் அமைகிறது .அதை உணர்ந்த முதல்வர் அவர்கள் தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வர் அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். இந்தியாவையே வழிநடத்தும் சக்தியாக இன்று மாணவர்கள் விளங்கி வருகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் முன்னேறவும், பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறவும் நவீன கல்வி முக்கியமாகிறது . இதனை கருத்தில் கொண்டு பள்ளிக்கல்வித் துறை உயர் கல்வித்துறைக்கு அதிக அளவில் நிதியினை முதல்வர் அவர்கள் ஒதுக்கி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள் .இதில் பள்ளி கல்லூரிக்கு ரூபாய் 49 ஆயிரம் கோடியும்,உயர் கல்வித்துறைக்கு ரூபாய் 9ஆயிரம் கோடியும் ஆக மொத்தம்ரூபாய் 58 ஆயிரம் கோடிநிதியினை ஒதுக்கி பல்வேறு வகையில் பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக தான் இன்று மாநில அளவில் அளவில் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் துவங்கப் பட்டுள்ளது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் ரூபாய் 13 கோடியே 22 லட்சத்து 16,550 மதிப்பீட்டில் 6107 மாணவர்களுக்கு இந்த மடிக்கணினி வழங்கப் படுகிறது. இந்த மடிக்கணினி பெறும் மாணவர்கள் உயர் கல்வியில் அரிய சாதனைகளை படைத்து தமிழ் நாட்டிற்கும், முதல்வருக்கும் பெருமை சேர்த்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் .இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் காரைக்குடி மாநகர மேயர் எஸ். முத்து துரை ,துணை மேயர் நா.குணசேகரன் ,திட்ட அலுவலர் மருத்துவர் ஜி அரவிந்த் ,அழகப்பா பல்கலைக்கழக பதிவாளர் ஏ .செந்தில் ராஜா ஒன்றிய கழகச் செயலாளர்கள் சுப. சின்னத்துரை, கே.எஸ். ஆனந்த்,பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே .எஸ் .ரவி , ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துக்குமார், வட்டபிரதிநிதி ஒட்டுனர் ரமேஸ்,உட்பட மாணவ, மாணவிகள் கல்லூரி பேராசிரியர் கள் கலந்து கொண்டார்கள்.

### தங்க தராசு

தவிட்டுக் கடை
தராசின் மீது உட்காரும்
‘ஈ’க்கு மதிப்பு கிடையாது

ஆனால்,
தங்க நகைக் கடை
தராசில் உட்காரும் ‘ஈ’
சில ஆயிரம்
ரூபாய்க்கான
மதிப்பை
பெற்றுவிடும்

ஆம்
தி.மு.க.என்பது
தங்க நகைக்கடை
தராசு

என்ன
நாஞ் சொல்றது...



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

---

கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் மீனவர்களுக்கு பொன்னான வாய்ப்பு!

# மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு 100 இடங்களில் சிறப்பு முகாம்!

## கழக மீனவர் அணிச் செயலாளர், மீனவர் நலவாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, ஜன.8-

“கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு 100 இடங்களில் சிறப்பு முகாம் நடைபெறுகிறது” என்று மீனவர் நல வாரியத் தலைவரும் கழக மீனவர் அணி செயலாளருமான அ. ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான முனைவர். அ. ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, “கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சியில் மீனவர்கள் நலன் சார்ந்து ஏராளமான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை 8000 ரூபாயாக உயர்த்தியது தொடங்கி மீனவர்கள் நலன்நாடும் பல திட்டங்கள் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் தமிழக மீனவர்களுக்கு கூடுதல் பலன்களைக் கொடுக்கும் வகையில் அவர்களை மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேர்க்கும் வகையில் தமிழகம் முழுவதும் 100 சிறப்பு முகாம்கள் நடத்தப் படுகிறது. இதற்கான சிறப்பு முகாம்கள் 8 ஆம் தேதி தொடங்கி, வரும் 31 ஆம் தேதிவரை நடக்கிறது. முதல் நிகழ்வாக குமரி மாவட்டத்தில் வரும் 8 ஆம் தேதி இந்த முகாம் தொடங்குகிறது. ஒவ்வொரு ஊரிலும் நடக்கும் முகாம்கள் குறித்து மீன்வளத்துறை அலுவலகம் மூலம் சுற்றறிக்கையாக அனுப்பி விழிப்பூணர்வூட்டப்பட்டு வருகிறது.



### யாரெல்லாம் சேரலாம்?

18 வயது முதல் 65 வரையுள்ள மீன் தொழிலாளர்கள் மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேரலாம். இதுவரை உறுப்பினராக இல்லாதவர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதன் மூலம் பயனாளிகளை விரிவுபடுத்துவதுடன், கழகத் தலைவர் மீனவ சமூகத்திற்கு வழங்கியிருக்கும் திட்டங்களையும் அவர்களிடம் கொண்டு சேர்ப்பதே இதன் முதன்மை நோக்கம்.

### தேவையான ஆவணங்கள்

மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு வயது மற்றும் இருப்பிடத்தைக் காட்டும் வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களான குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட இதர முக்கிய ஆவணங்களின் நகல், வாரிசுதாரர்களின் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றோடு, உறுப்பினராக சேர வரும் மீனவர்கள் தங்களது பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தையும் கொண்டு வர வேண்டும்.

### செயல்படுத்தப்படும் திட்டங்கள்

நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கும் மீன் தொழிலாளர்களுக்கு ஏராளமான நிவாரணங்களும், உதவித் தொகையும் பெற முடியும். உறுப்பினராக இருக்கும் மீன் தொழிலாளி விபத்தினால் மரணம் அடைந்தால் 2 லட்சம் ரூபாயும், இரண்டு கைகளையோ, அல்லது இரு கால்களையோ இழந்திருந்தால் ஒரு லட்சம், ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு ஏற்பட்டால் ஒரு லட்சம் என நிவாரணத் தொகை வழங்கப்படும்.

இதேபோல், இருகண்களிலும் பார்வை இழப்பு ஏற்படும்பட்சத்தில் ஒரு லட்சம் ரூபாயும், உடல் உறுப்புகளில் ஏதேனும் விபத்தில் இழப்பு ஏற்பட்டால் 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக வழங்கப்படும். இதேபோல் மீன்பிடித் தொழிலின் போது ஏற்படும் உயிரிழப்பிற்கும் 2 லட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும். இயற்கை சீற்றத்தினாலோ, பேரிடரினாலோ கடலில் மீனவர்கள் காணாமல் போனாலும் நலவாரிய உறுப்பினராக இருக்கும் மீனவரின் குடும்பத்திற்கு 2 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும். இதேபோல் நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கும் மீனவர் இயற்கை மரணம் அடைந்தால் 25000 ரூபாயும், அவரது ஈமச் சடங்கு செலவிற்கென 2500 ரூபாயும் வழங்கப்படும்.

### கல்விக்கு கைகொடுக்கும் திட்டம்!

நலவாரியத்தில் உறுப்பினராக இருப்பவரின் மகன், மகளுக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகையும் கிடைக்கும். நலவாரிய உறுப்பினரின் மகன் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் 1250 ரூபாயும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 1750 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். இதேபோல் உறுப்பினரின் மகள் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 1500 ரூபாயும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 2500 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.

உறுப்பினரின் மகன் ஐடிஐ, பாலிடெக்னிக் போன்ற தொல்நுட்பக் கல்வி பயின்றால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 1950 ரூபாயும், கலைக் கல்லூரிகளில் இளங்கலை படித்தால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 2500 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். முதுகலை படிப்பிற்கு ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 3750 ரூபாய் வழங்கப்படும். சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற இளங்கலை தொழிற்படிப்புகளுக்கு அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு 4750 ரூபாய் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். இதேபோல் முதுகலை தொழில் கல்வி பயின்றால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 6750 ரூபாய் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.

நலவாரிய உறுப்பினர்களின் மகனின் திரு மணத்திற்கு 3000 ரூபாயும், மகளின் திருமணத்திற்கு 5000 ரூபாயும் வழங்கப்படும். இதேபோல் மகப்பேறு காலத்திலும் 6000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும். தமிழகத்தின் 14 மாவட்டங்களிலும் இருக்கும் மீனவ மக்கள் இந்த நல்லவாய்ப்பினை பயன்படுத்தி, மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேர்ந்து பலன் அடைய வேண்டும். மேலும், மீனவ மக்களின் நலனிற்காக மீனவர் நலவாரியத்திற்கு தலைவரை நியமித்து, மீனவ மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் முகாம் நடத்தி, உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த ஆவணச் செய்த கழகத் தலைவர், முதல்வர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

“இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

செஞ்சி கிழக்கு, மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில்!

# திராவிடப் பொங்கல் விளையாட்டுப் போட்டிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜன.8-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சிகிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கோனை ஊராட்சி,செஞ்சி மத்திய ஒன்றியம் கணக்கன் குப்பம் ஆகிய ஊராட்சிகளில் சமூக நீதிக்கான திராவிடப் பொங்கல் வாலிபால், ஹாக்கி விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குசெஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், கோணை ஊராட்சி மன்ற தலைவர் பிருந்தா சக்தி முருகன் ஆகியோர்முன்னிலை வகித்தனர்.செஞ்சி மத்திய ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்டப் பிரதிநிதி அய்யாதுரை, ஆகியோர்அனைவரையும் வரவேற்றனர்.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஏற்பாட்டில் நடைபெற்றவாலிபால் மற்றும் ஹாக்கி விளையாட்டுப் போட்டியினை

விழுப்புரம் வடக்கு மாவட்டப்பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் அரங்க ஏழுமலை பிரசன்னா, ஆறுமுகம், குமார், இக்பால், தாட்சயானி கார்த்திகேயன், திருநாவுக்கரசு, சாரங்கபாணி, சத்யா கார்த்தி கேயன், மகேஸ்வரி பொற்செழியன், ரேவதி கணேசன், பழனி, பாலகிருஷ்ணன், குமார் சக்திவேல், அறிவழகன், சென்னாலூர் மணி, ராமு, காந்தி,பழனிவேல் கணேசன், முத்து,பன்னீர், மகேஷ், தினகரன், கனகன் குப்பம், கெங்கவரம் ஆனந்தராஜ், ஆரோக்கிய தாஸ், லட்சுமணன், டீ கடை ரமேஷ், கோபால், உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

---

# பெரம்பலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

பெரம்லூர், ஜன.8-

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம், பாலக் கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்ட மன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்த கூட்டத்தில், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக் குழு உறுப்பினர் கி.முகுந்தன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், செ.அண்ணாதுரை,

டி.கே. ராமச்சந்திரன், ஆர்.முருகேசன், தொகுதி பார்வையாளர்கள் தங்க. சித்தார்த்தன், ஏ.கேஅருண், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், வைப்பார் கிராமத்தில் இராஜகம்பள மகாஜன சங்கம் நடத்தும் மாமன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, 5ம் ஆண்டு மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, இம்மானுவேல், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் செயற்குழு ஆலோசனைக் கூட்டம் வடக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ஆ.ஜெ. மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. தலைமையில், மாவட்டக் கழக அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்து பேசுகையில் வரும் தைத்திங்கள் தமிழர் திருநாள் திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் குறித்தும், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்) குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்,